சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 12.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 2419/E/2024**

திரு.S.பழனியப்பன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
(பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
திருச்சி மாவட்டம்- 620 001.

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 17.02.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திரு.ச.அதியமான் கவியரசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), திருச்சி சார்பு திருமதி.சசிகலா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், திருவெறும்பூர் அவர்கள் இவ்வாணையத்தில் 12.06.2026-ல் நேரில் ஆஜராகி, 22.05.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பாக ஆணைத்தின் 17.02.2026 தேதியிட்ட உத்தரவின்படி, தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் 15.05.2026 அன்று மனுதாரரது சொத்து என்பதற்கான பத்திர பதிவு ஆவணங்களுடன் நேரில் கள ஆய்வு செய்து தகவல் பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு பொதுத் தகவல் அலுவலரின் 06.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுதாரர் கள ஆய்வு செய்ய ஆஜராகவில்லை என பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் களஆய்வு செய்ய மனுதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள் மனுதாரர் அதனை பயன்படுத்த தவறியுள்ளார். இருப்பினும், மனுதாரருக்கு சட்டப் பிரிவு 2(j)-

ன்கீழ் களஆய்வு செய்ய மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கவும், அதன்படி மனுதாரர் களஆய்வு செய்து, குறிப்பிட்டுக் கோரும் தகவல்களை, 17.02.2026 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு தகவல் வழங்கவும் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, **இவ்வழக்கானது முற்றாக்கம் செய்யப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 2419/E/2024**
**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டம்- 620 001.

**மேல்முறையீட்டாளர்**
திரு.S.பழனியப்பன், த/பெ.சாமியப்பன்,
2/118, உசிலம்பட்டி காப்பக்குடி,,
மருங்காபுரி (கல்லுப்பட்டி) (வட்டம்),
தருச்சி மாவட்டம்- 622 002.

Copy to: File MP/PA,